**செய்தி வெளியீடு எண் : 2397** **நாள் : 02.12.2023**

**இந்தியாவின் மூன்றாம் பெண் கிராண்ட்மாஸ்டர் வைஷாலி அவர்களை வாழ்த்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு**

இந்தியாவின் மூன்றாம் பெண் கிராண்ட்மாஸ்டர் ஆகவும், தமிழ்நாட்டின் முதல் பெண் கிராண்ட்மாஸ்டர் ஆகவும் உயர்ந்துள்ள வைஷாலி அவர்களுக்கு எனது பாராட்டுகள்!

2023–ஆம் ஆண்டு உங்களுக்கு மிகச் சிறப்பான ஆண்டாக அமைந்துள்ளது. உங்கள் தம்பி பிரக்ஞானந்தாவுடன் இணைந்து கேண்டிடேட்ஸ் தொடருக்குத் தகுதி பெற்றதன் மூலம், அத்தொடருக்குத் தகுதி பெற்ற முதல் உடன்பிறந்தவர்கள் என்ற வரலாற்றைப் படைத்தீர்கள்.

அதற்கு மேலும் மணிமகுடமாகத் தற்போது நீங்கள் கிராண்ட்மாஸ்டர் ஆகி, முதல்முறையாக உடன்பிறந்தோர் இருவர் கிராண்ட்மாஸ்டராக இருக்கும் சாதனையைப் படைத்துள்ளீர்கள். உங்கள் சாதனைகளால் நாங்கள் மிகவும் பெருமைகொள்கிறோம்.

உங்களது தனிச்சிறப்பான பயணம் செஸ் ஆர்வம் கொண்ட பலருக்கும் ஊக்கமாக விளங்குகிறது. நமது தமிழ்நாட்டில் பெண்களின் முன்னேற்றத்துக்கான அடையாளமாகத் திகழ்கிறது.

******

Huge congrats, Vaishali, on becoming the third female Grandmaster from India and the first from Tamil Nadu!

2023 has been splendid for you. Alongside your brother Praggnanandhaa, you've made history as the first sister-brother duo to qualify for the Candidates tournament. Adding to the glory, you are now the first-ever Grandmaster siblings.

We're immensely proud of your achievements, and your remarkable journey is an inspiration to aspiring chess enthusiasts and a testament to women's empowerment in our state!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in